**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், சங்ககிரி**
**(சார்பு நீதிமன்றம், சங்ககிரி)**

முன்னிலை : **திருமதி. M. மேகலா மைதிலி, பி.ஏ.,பி.எல்.,**
இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர் / சார்பு நீதிபதி, சங்ககிரி.

திருவள்ளுவராண்டு 2049, விகாரி வருடம், ஆடித்திங்கள் 2 ம் நாள் வியாழக்கிழமை
2019 ம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ம் நாள் வியாழக்கிழமை

**இ.வி.கோ.ம.எண். 150 / 2013**

தனசேகரன் .. மனுதாரர்

**/எதிராக/**

1. முருகேசன்
2. முருகையன்
2. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   பவானி. ..எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்த தீர்ப்பாயம் முன்பாக 6.7.2019 ம் நாளன்று இறுதியான விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.R.முருகேசன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இந்த தீர்ப்பாயத்தில் அழைத்தும் ஆஜராகததாலும், எதிருரை தாக்கல் செய்யப்படாததாலும் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இது நாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் பரிசீலனையில் இருந்ததுமான இம்மனுவில் இன்று இந்த தீர்ப்பாயம் பிறப்பிக்கும்,

**உத்தரவு:-**

இம்மனுவானது 12.11.2012 ம் தேதி நடந்த சாலை விபத்தில் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.5,00,000/-ம், பின்வட்டி மற்றும் செலவுத்தொகை கோரி மோ.வா.சட்டம் பிரிவு 166 மற்றும் விதி 3 மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாய விதிகளின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம் :**

கடந்த 12.11.2012 ம் தேதி இரவு 9.30 மணியளவில் மனுதாரர் பதிவு எண் TN 52 D 7326 (TVS XL Super Heavy Duty) என்ற இருசக்கர மோட்டார் வாகனத்தில் பூலாம்பட்டி - எடப்பாடி சாலையில் பூலாம்பட்டி காவல் நிலையம் அருகே தெற்கிலிருந்து வடக்காக மேற்படி சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்த போது, எதிரே வடக்கிலிருந்து தெற்காக வந்த TN 69 W 4956 என்ற பதிவு எண் கொண்ட ஈச்சர் மினி லாரியின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, மேற்படி இருசக்கர மோட்டார் வாகனத்தின் மீது மோதிவிட்டதாகவும், இந்த விபத்தில் மனுதாரருக்கு பற்களிலும், கீழ் தாடை, மூக்கு, கண், இடது கால் பாதம், வலது கால் மற்றும் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டதாகவும், உடனடியாக எடப்பாடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும், இதற்கென ரூ.1,00,000/- வரை செலவளித்து உள்ளதாகவும், தனக்கு ஏற்பட்ட உடல்வலி, மனவேதனை ஆகியவற்றிற்கு என ரூ.5,00,000/- இழப்பீடாக வழங்க வேண்டுமென மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு அஞ்சல் அறிவிப்பும், நீதிமன்ற அறிவிப்பும் அனுப்பப்பட்டும், அதனை அவர்கள் பெற்றுக்கொண்ட பின்னரும் இந்த தீர்ப்பாயத்தில் ஆஜராகவில்லை. அவர்களுக்கு 25.4.2013 வரை அவகாசம் வழங்கியும், எதிருரை எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தாலும், எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக உள்ளனர்.

**தீர்வை வினாக்கள் :**

1. யாருடைய அஜாக்கிரதையின் காரணமாக விபத்து ஏற்பட்டது ?
2. விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் ?
3. மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீடு கிடைக்கத்தக்கதா ? ஆம் எனில் எவ்வளவு ?

இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் 12 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்து குறியீடு செய்யப்படவில்லை.

**தீர்வை வினா எண் : 1 மற்றும் 2**

இந்த மனுவானது 12.11.2012 ம் தேதி மனுதாரர் பூலாம்பட்டி - எடப்பாடி மெயின் ரோட்டில் பூலாம்பட்டி காவல் நிலையம் அருகில் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்காக சாலையின் இடதுபுற ஓரத்தில் மிதமான வேகத்தில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த TN 69 W 4956 பதிவு எண் கொண்ட மினி லாரியின் ஓட்டுநர் வடக்கிலிருந்து தெற்காக கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் ஓட்டி வந்த TVS வாகனத்தின் மீது மோதியதில் மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டு, மனுதாரருக்கு பற்களில் இரண்டு கொடுங்காயமும், முகம், மூக்கு, கண், இடது கால் பாதம் மற்றும் வலது காலில் சாதாரண காயமும் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் பூலாம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 214/2012 ன் கீழ் இந்த வழக்கு தொடர்பாக புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதற்கான முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஐ பரிசீலித்ததில் இந்த வழக்கின் புகாரானது இந்த மனுதாரரால் 13.11.2012 ம் தேதி 2.30 மணியளவில் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது வாக்குமூலம் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. விபத்து ஏற்பட்டவுடன் மனுதாரர் 13.11.2012 ம் தேதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 ஐ பரிசீலித்ததில் மனுதாரர் எடப்பாடி அரசு மருத்துவமனையிலிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.3 ஆகவும், காப்பீட்டு நகல் ம.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 ஐ பரிசீலித்ததில் மேற்படி வாகனமானது கருத்தபெருமாள் என்பவருக்கு உரிமையானது என்பதும், ம.சா.ஆ.4 ஐ பரிசீலித்ததில் மேற்படி வாகனத்திற்கு விபத்து தேதியில் காப்பீடானது அமலில் இருந்து வந்துள்ளதும் தெரிய வருகிறது. மேலும் மேற்படி வாகனமானது 2 ம் எதிர்மனுதாரர் பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

1, 2 எதிர்மனுதாரர்கள் 25.4.2013 ம் தேதியிலேயே இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர். 1 ம் எதிர்மனுதாரருடைய ஓட்டுநர் உரிமம் நகலானது மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே ம.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களை பரிசீலித்ததில் இந்த விபத்தானது ஏற்பட்டுள்ளது உண்மை என்பதும் 1, 2 எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே இந்த விபத்தானது ஏற்பட்டுள்ளது என்பதை மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

மேலும், வாகனத்தின் ஓட்டுநர் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கான குற்ற இறுதியறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ-9 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.9 ஐ பரிசீலித்ததில் 12.11.2012 ம் தேதி இரவு 9.00 மணியளவில் இந்த மனுவின் மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது எதிரி ஓட்டி வந்த வாகனமானது மோதியதில் விபத்து ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த மனுவில் வாகனத்தின் ஓட்டுநர் பெயர் யுவராஜ் என காட்டப்பட்டுள்ளது. மேற்படி யுவராஜ் குற்ற இழைத்ததாகவும் குற்ற இறுதியறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே, TN 69 W 4956 என்ற பதிவு எண் உள்ள வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு, அஜாக்கிரதையால் தான் இந்த விபத்தானது ஏற்பட்டுள்ளது என தெரிய வருகிறது. எனவே, மேற்படி வாகனமானது 3 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள படியால், மேற்படி மனுதாரர் கோரும் இழப்பீட்டினை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் சேர்ந்து கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது.

**<u>தீர்வை வினா எண் : 3</u>**

மனுதாரர் தரப்பில் விபத்திற்கு பின்னிட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்னர் 1.12.2012 ம் தேதியில் எடப்பாடி ஜெயம் டென்டல் கிளினிக்கில் தொடர்ந்து சிகிச்சை எடுத்து கொண்டதாகவும், அங்கு மனுதாரருக்கு பாதிக்கப்பட்ட பற்கள் நீக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனு கலம் எண் 13 ல் சிகிச்சைக்காக மனுதாரர் ரூ.1 லட்சம் வரை செலவு செய்ததாகவும், அதே போல் கலம் எண் 21(a)லும் சிகிச்சைக்காகவும், வாகன சேதராத்திற்காகவும் ரூ.1 லட்சம் வரை செலவு செய்ததாகவும் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ பில்களை பரிசீலித்ததில் ரூ.33,810/- மட்டுமே மருத்துவ பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் மனுதாரருக்கு எடுக்கப்பட்ட X-ray ஆனது ம.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் தரப்பில் ரூ.1 லட்சம் வரை சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வாகனத்தை பழுது செய்ததற்கான பில்லானது ம.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.10 ஐ பரிசீலித்ததில் வாகன சேதராத்திற்கு ரூ.3,063/- செலவு செய்யப்பட்தற்கான பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் சேலம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி ஆனது ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ம.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் விபத்தானது ஏற்பட்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான

மருத்துவ பில்களும் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள டிஸ்சார்ஜ் சம்மரியில் 1, 2 காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், பற்களில் அடிபட்டுள்ள காயமானது கொடுங்காயங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி டிஸ்சார்ஜ் சம்மரியில் பல் மருத்துவரின் தொடர் சிகிச்சை தேவைப்படவில்லை எனவும், அதே போல் காது மூக்கு நிபுணரின் தொடர் சிகிச்சையும் தேவைப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் ம.சா.ஆ.6 ஐ பரிசீலித்ததில் மனுதாரர் எடப்பாடி பல் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டது தெரிய வருகிறது.

மனுதாரருக்கு ரூ.50,000/- வருமான இழப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் கட்டிட மேஸ்திரியாக வேலை பார்த்து வருவதாகவும், அவருக்கு மாதம் ரூ.15,000/- வருமானம் கிடைக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் மனுதாரர் கட்டிட மேஸ்திரியாக வேலை செய்து வந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் 12.11.2012 முதல் 15.11.2012 தேதி வரையிலும், பின்னிட்டு 1.12.2012 ம் தேதியில் சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளதும் தெரிய வருகிறது. எனவே மனுதாரர் மாத கணக்கில் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர் தரப்பில் அவருக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது நிரூபிக்கப்படவில்லை என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது. அதே போல மருத்துவ செலவிற்காகவும், வாகன சேதத்திற்காகவும் ரூ.1 லட்சம் செலவு ஏற்பட்டுள்ளது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது. மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் தொடர் சிகிச்சைக்காக ரூ.3 லட்சம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு மனுதாரர் தொடர் சிகிச்சை எடுத்து வருகின்றது வலி மற்றும் தொடர் சிகிச்சைக்கு செலவு செய்வதை காட்டுவதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர் கோரிய வகையில் வருமான இழப்பீட்டிற்காக ரூ.30,000/-மும், பகுதியான வருமான இழப்பிற்காக ரூ.15,000/-மும், போக்குவரத்து செலவிற்காக ரூ.5,000/-மும், ஊட்ட சத்திற்கு ரூ.10,000/-மும், மருத்துவ மற்றும் வாகன சேதாரத்திற்காக ரூ.40,000/-மும், வலி மற்றும் தொடர் சிகிச்சைக்காக ரூ.1,00,000/-மும் வழங்கப்படலாம் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**<u>இறுதி கணக்கீடு :</u>**

| | |
|---|---|
| 1) வருமான இழப்பீடு | .......... ரூ. 0,30,000.00 |
| 2) பகுதி வருமான இழப்பு | .......... ரூ. 0,15,000.00 |
| 3) போக்குவரத்து செலவு | .......... ரூ. 0,05,000.00 |
| 4) ஊட்டச்சத்து | .......... ரூ. 0,10,000.00 |
| 5) மருத்துவ மற்றும் வாகன சேதார செலவு | .......... ரூ. 0,40,000.00 |
| 6) வலி மற்றும் தொடர் சிகிச்சை | .......... ரூ. 1,00,000.00 |
| மொத்தம் | **ரூ. 2,00,000.00** |

முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ **ரூ.2,00,000/-** (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக இம்மனுதாரருக்கு வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்று இந்த தீர்ப்பாயம் பணித்து உத்திரவிடுகிறது. இந்த இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் நாள் முதல் **7.5%** வட்டி செலுத்த வேண்டுமென்றும், எதிர்மனுதாரர்கள் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், எதிர்மனுதாரர்கள் வைப்பீடு செய்தவுடன், மனுதாரர் முழுத்தொகையையும், அதற்கென சேர்ந்த வட்டியையும் சேர்த்து திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்றும் இந்த தீர்ப்பாயம் உத்தரவிடுகிறது.

வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7,000/- நிர்ணயிக்கப்படுகிறது. இம்மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.10/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார்கள். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடைமனு எண் 1185/2013 உத்தரவு நாள் 4.1.2013ன் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை மனுதாரர்கள் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறினால் உத்தரவு தேதியிலிருந்து நீதிமன்றக் கட்டணம் செலுத்தும் தேதி வரை மனுதாரர் வட்டி பெற தகுதியற்றவர் என உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் வங்கி கணக்கு விபரத்தை கொடுத்தவுடன் அவருக்கு சேர வேண்டிய தொகை அவர் வங்கி கணக்கில் செலுத்தி வைக்க வேண்டுமென்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2019ம் ஆண்டு ஜூலை திங்கள் 18ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்/- M. மேகலாமைதிலி)**
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

**மனுதாரர் தரப்பு சாட்சிப்பட்டியல்-**

ம.சா.1 .. திரு. தனசேகரன்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல்** - எவருமிலர்

**மனுதாரர் தரப்பு சான்றாவணப்பட்டியல் -**

ம.சா.ஆ.1 .. 13.11.2012 தேதிய முதல் தகவல் அறிக்கை நகல்

ம.சா.ஆ.2 .. 13.11.2012 தேதிய விபத்து பதிவேட்டு நகல்

ம.சா.ஆ.3 .. TN 69 W 4956 வாகனத்தின் பதிவு சான்று நகல்

ம.சா.ஆ.4 .. TN 69 W 4956 வாகனத்தின் காப்பீட்டு ஆவண நகல்

ம.சா.ஆ.5 .. யுவராஜ் என்பவரின் ஓட்டுநர் உரிம நகல்

ம.சா.ஆ.6 .. மருத்துவ ரசீதுகள்

ம.சா.ஆ.7 .. X- rays

ம.சா.ஆ.8 .. 13.11.2012 தேதிய மருத்துவமனை விடுவிப்பு குறிப்பு

ம.சா.ஆ.9 .. 07.12.2012 தேதிய குற்ற இறுதியறிக்கை நகல்

ம.சா.ஆ.10 .. வாகன சேதாரத்திற்கான பில்கள்

ம.சா.ஆ.11 .. ஊன சான்று

ம.சா.ஆ.12 .. X-rays

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல்** - எதுவுமில்லை

(ஒப்பம்/- **M**. மேகலாமைதிலி)

**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**